**0S NO. 155/2019 22.10.2024**

**PW1 சதாசிவம்.**

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டது 2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

**என்னுடன் தாமோதரன், முருகேசன், பத்மா, சதாசிவம் ஆகியோர் உடன் பிறந்தவர்கள். தாமோதரன் என் தாயார் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் இல்லை. என் தாயார் இறந்த பின்பு தான் அவர் இறந்தார். ஒன்றாம்பிரதிவாதி பத்மாவுக்கு என் தகப்பனாரும் தாயாரும் சேர்ந்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். சொத்துக்கள் என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி தாமோதரனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் இல்லை. அவ்வாறு என் தகப்பனார் எனக்கும் என் சகோதரர் முருகேசனுக்கும் ஒதுக்கி கொடுத்த சொத்தை நான் கிரயம் செய்து விட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது இரண்டு முதல் 8 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும் சொன்னான் சரியல்ல. என் தகப்பனார் காலத்திலேயே பாகப்பிரிவினை நடைபெற்று விட்டதால் நான் கூறும் பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை நான் கிரயம் செய்து விட்டு தற்போது மேற்படி கிரயங்களை மறுத்து இந்த வழக்கில் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.**

**(வழக்கு 9 முதல் 12 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**